★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

நிறுவனர்: ... ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 23உ திங்கள் (8—10—56) ★ ★ வெளியூர் : புரட்டாசி 24உ செவ்வாய் (9—10—56) [இதழ் 102

'பண மூட்டைகள் தப்பிவிடுகிறார்கள்'

'வரி விதிப்பு முறையையே மாற்ற வேண்டும்'

நிதி அமைச்சர் கருத்து

"இந்தியாவில் வருமான வரி ஏமாற்றுதல் அதிகமாக உள்ளது. வரவேண்டிய பணத்தில் பாதிதான் வசூலாகிறது" என்று இந்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி தமிழ்நாடு சட்டசபைக் காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், இதற்குச் சட்டத்தை மட்டும் திருத்தினால் போதாது; வரி விதிப்பு முறையையே மாற்ற வேண்டும் என்று கூறினார்.

படுகொலை கேட்டேன்; பதறினேன்

சாமியின் தந்தையைக் கண்டேன்; கதறினேன்

ஆறுதல் கூற வந்தேன்; ஆறுதல் கோரி நிற்கிறேன்

காட்டுக்குணக் கயமை ஒழிக்கப்பட வேண்டும்

பொது வாழ்க்கையின் புனிதம் உணரப்பட வேண்டும்

சாமியின் மறைவு நாட்டுக்கு ஒரு எச்சரிக்கை

துக்கம் துளைக்கிறது; சேர்ந்து அழுகிறோம்

தூத்துக்குடி அனுதாபக் கூட்டத்தில் அண்ணா உருக்கமான பேச்சு

"வீசிக்கொண்டிருந்த தென்றல் திடீரென நின்றுவிட்டதைப் போல—கையில் வைத்திருந்த கண்ணாடிப் பாத்திரம் கை நழுவி விழுந்து சுக்குநூறானதைப்போல—தொட்டிலில் படுத்திருந்த குழந்தை கண் முன்னால் சில கயவர்களால் உயிர் பறிக்கப்படுவதைப்போல தோழர் சாமி நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறார்.

"சாமி படுகொலை செய்யப்பட்ட இடத்தைப் பார்த்தேன்; பதறிப்போனேன்; அது ஒன்றும் காட்டு வழி அல்ல; நகரின் நடுவே உள்ள கடைவீதி; கொல்லப்பட்ட நேரம் ஒன்றும் ஆள் நடமாட்டமே இல்லாத நட்ட நடுநிசி அல்ல.

"பகிரங்கமான பாதையில், ஏராளமானோர் நடமாடிக் கொண்டிருந்த நேரத்தில், ஊருக்கு உழைக்கும் ஒரு தொண்டன் சில பாதகர்களால் படுகொலை செய்யப்படுகிறான் என்றால், நாம் எல்லாம் நாட்டில்தான் வாழுகிறோமா? நாகரீக உலகில்தான் உலவுகிறோமா? இதை எண்ணினால், வெட்கம் வேலாக விலாவைக் குத்துகிறது.

"சர்க்கார், சாமியின் கொலைபற்றி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைத் தொடர்ந்து தீவிரமாக்கி, நியாயம் யார் யாரைக் குற்றவாளிகள் என்று சுட்டிக்காட்டுகிறதோ, அவர்களை எல்லாம் கூண்டிலேற்றியாக வேண்டும். விஷயத்தை ஊறுகாய்ப் பானையில் போட்டுவிடக் கூடாது.

"நாட்டில் வளர்ந்திருக்கிற காட்டுமிராண்டித்தனம் ஒழிக்கப்பட்டாக வேண்டும். சிலர் உள்ளத்தில் வளர்ந்திருக்கிற காதகத்தன்மை கெல்லி எறியப்பட்டாக வேண்டும்; சாமியின் மறைவு நமக்குக் கூறுகிற பாடம் எல்லாம் அது தான்.

"'நாட்டுள் வளர்ந்துள்ள காட்டுச் சுபாவம் மறைகிறவரையில் நாம் ஓயமாட்டோம்; பணிபுரிவோம்' என்பதைத்தான், இந்த நேரத்தில் சூளுரைத்துக்கொள்ள வேண்டும்.

என்று, 30—9—56 அன்று, தூத்துக்குடியில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது :—

"சில மாதங்களுக்கு முன்னால் இதே திடலில்தான், தோழர் கே. வி. கே. சாமி என்னை அழைத்துவந்து, மாநில மாநாட்டிற்காக நெல்லை மாவட்டச் சார்பில் நிதியளித்தார்.

"இப்போது இந்த மேடைக்கு வந்தபோது, அந்தக் காட்சிதான் என் கண்முன் வந்து நின்றது.

"மாநில மாநாட்டிற்கு நிதி பெறுவதற்காக இங்கே வந்த நான், இப்போது சாமிக்காக நடைபெறும் அனுதாபக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வருகிற துர்பாக்கியமான நிலை ஏற்பட்டிருப்பது கண்டு வேதனைப்படுகிறேன்.

"நான், சாமியின் அனுதாபக் கூட்டத்திற்கா இங்கு வர வேண்டும்?

"சாமிக்குத் திருமணம் ஏற்பாடாகி, அதற்கு நான் வந்திருக்கவேண்டும்; சாமி வரப்போகும் தேர்தலில் நின்று அவரை ஆதரித்துப் பேசுவதற்கு நான் இங்கு வந்திருக்க வேண்டும்; தேர்தலில் அவர் வெற்றி பெற்றதும் அவரைப் பாராட்டுவதற்கு வந்திருக்க வேண்டும். ஆனால் இதற்கெல்லாம் வர வாய்ப்பில்லாமல், சாமி படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு, அவருக்கு அனுதாபம் தெரிவிக்கிறதற்காக நான் இங்கு வருகிற துர்பாக்கியமான நிலை ஏற்பட்டிருக்கிறது.

தோழர் சாமி அவர்கட்கு 32 வயதுதான் ஆகிறது. ஆனால், இந்த 32 வயதுக்குள் அவர் பல வகையிலும் பல துறைகளிலும் பெருமை மிகு அளவு வளர்ந்திருந்தார். தோழர் சாமி அவர்கள் ஆற்றிவந்த பணிகள், பெற்றுவந்த வளர்ச்சி—இவை 60 வயதிருந்தாலும் செய்ய முடியாதன—பெற முடியாதன. 60 வயது வரை பாடுபட்டாலும் மேற்கொள்ள முடியாத பணிகளைச் சாமி மேற்கொண்டிருந்தார்; பெற முடியாத வெற்றி, வளர்ச்சி பெருமை — இவற்றைப் பெற்றிருந்தார். இதனால் பொறாமை கொண்ட சிலர், இன்று சாமியையே கொன்றுவிட்டிருக்கிறார்கள்.

"தோழர் சாமி தி. மு. கழகம் தோன்றிய நாளிலிருந்து கழகத்திடம் நீங்காப் பற்றுக் கொண்டு, கழக வளர்ச்சிக்காகப் பாடுபட்டுவந்தார்.

"பல்வேறு தொழிற்சங்கங்களை நிறுவித் தொழிலாளர்களை ஒன்று திரட்டி, அவர்களின் நலன்களுக்காக இடைவிடாது பாடுபட்டு வந்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

வேலையற்றோர் பட்டியல் பெருகுகிறது!

7,92,345 பேர் பதிவு செய்துள்ளார்கள்

புதுடில்லி, அக்.—

இந்தியாவிலுள்ள வேலை தேடித்தரும் நிலையங்களில், 1956 ஆகஸ்டு மாதத்தில் பெயர்ப் பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை முந்திய மாதத்தில் 1,70,918 ஆகக் குறைந்துவிட்ட போதிலும், வேலை உதவி கோரி இந்த நிலையங்களில் பெயர்ப் பதிவாகியிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கையில் உயர்வு காணப்பட்டது. முந்திய மாதத்தில் இவர்களின் எண்ணிக்கை 7,92,845 ஆக இருந்தது. பரிசீலனை மாதத்தில் 7,97,212 ஆக உயர்ந்துவிட்டது. வேலை தேடித்தரும் நிலையங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட காலி நிறுவனங்களின் எண்ணிக்கை சுமார் 7 சதவிகிதம் குறைந்துவிட்டது. முந்திய மாதத்தில் 5,500 காலி இடங்கள் பற்றிய தகவல் கிடைத்தது. இந்த மாதம் அது 5 250 ஆகக் குறைந்துவிட்டது. இதேபோல, வேலையிலமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கையிலும் குறைவு காணப்பட்டது. முந்திய மாதத்தில் மொத்தம் 16,007 பேருக்கு வேலை தேடித் தரப்பட்டது. ஆகஸ்டு மாதத்தில் 14,901 பேருக்குத்தான் வேலை தேடித்தரப்பட்டது.

4,750 பேருக்கு மத்திய சர்க்காரிலும், 6,090 பேருக்கு ராஜ்ய சர்க்கார்களிலும், 2,307 பேருக்கு உத்தியோகச சார்புள்ள ஸ்தாபனங்களிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், 1,754 பேருக்கு இதர தொழில்களிலும் வேலை தேடித் தரப்பட்டிருக்கின்றது.

8,482 பேர் (252 பெண்கள் உட்பட) முன்னிலும் நல்ல உதவிகளுக்காக உதவி கோரியிருக்கிறார்கள்.

'தாய் மொழியிலேயே போதனை வேண்டும்'

காங்கிரஸ் பொதுச்செயலாளர் கருத்து

சென்னை, அக். 6—

"ஆரம்பக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக்கல்வி மற்றும் பல்கலைக் கழகக் கல்வி ஆகியவை தாய்மொழி அல்லது பிரதேசமொழியிலேயே போதிக்கப்பட வேண்டும்,"

என்று, காங்கிரஸ் பொதுச்செயலாளர் நாராயண் கிருபர்களிடம் கூறினார்.

ஆங்கிலம் பற்றி குறிப்பிடுகையில் அவர், பல்கலைக்கழகத்தில்இது மிகவும் முக்கியமான மொழியாகும் என்றும் அதை அவசியம் நன்கு பயில வேண்டும் என்றும் கூறினார்.

'தோழமை' ஏற்பாட்டுக்கு வழிகாண

பிரஜா-சோஷலிஸ்டு கமிட்டி அமைத்தது

தி. மு. கழக பொதுச்செயலாளரிடம் கலந்து பேசக்கூடும்

தோழர்கள் கே. எம். வல்லத்தரசு, வி. ஆர். இராதா கிருஷ்ணன், ஏ. சுப்பிரமணியம், ஜி. இராசமன்னார் ஆகியோர் கொண்ட தனிக் கமிட்டி அமைத்து, தேர்தலில் தமிழ் நாட்டிலுள்ள காங்கிரசல்லாத மற்றக் கட்சிகள் குறித்துப் பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சி என்ன போக்கு வகுத்துக் கொண்டு பணியாற்றுவது என்பது குறித்து ஆலோசனை கூறும்படி, தமிழ் நாடு பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியின் நிர்வாகக் கமிட்டி, மதுரையில் கூடி அக்டோபர் 3-ல் முடிவு செய்திருக்கிறது.

ஏற்கனவே கயாவில் பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சியுடனும் வகுப்புவாதக் கட்சிகளுடனும் தேர்தல் கூட்டுறவு வைத்துக்கொள்ளக் கூடாது என்று முடிவு செய்திருக்கிறது.

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடுவதால், பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சி, தி. மு. கழகத்துடன் கலந்துபேசி, காங்கிரசைத் தோற்கடிப்பதற்கான வாய்ப்பினை உறுதிப்படுத்தும் விதத்தில், ஏதாவது ஓர் ஏற்பாடு—தோழமை—செய்துகொள்ள வேண்டும் என்றக் கருத்து, பிரஜா—சோஷலிஸ்டுக் கட்சி வட்டாரத்தில் வெகுவாக வளர்ந்திருக்கிறது.

காங்கிரசல்லாத பிறகட்சிகள் குறித்து பிரஜா-சோஷலிஸ்டுகள் எவ்விதமான முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதை ஆய்ந்தறிந்து ஆலோசனை கூற அமைக்கப்பட்டிருக்கும் கமிட்டி உறுப்பினர்களில் ஒருவரான தோழர் ஜி. இராசமன்னார் சென்ற திங்கள், தி. மு. க. தலைமைக் கழகம் வந்திருந்து, இது குறித்த பேச்சு துவக்கினார் என்பது குறிப்பிடத் தக்கது.

திராவிட முன்னேற்றக் கழகம், பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சி போலவே, கூட்டணி—கூட்டு முயற்சி என்பவைகள் தேவையில்லை என்ற கருத்தைத்தான் கொண்டிருக்கிறது என்பதும், தொகுதிகளின் தன்மை, அங்கு உள்ள வாய்ப்புகள் ஆகியவற்றினைக் கவனித்து, அங்கு காங்கிரசைத் தோற்கடிக்க எந்தக் கட்சி போட்டியிட்டால், நல்லது என்பது குறித்துத் தோழமை உணர்ச்சியுடன் கலந்து பேசி, தக்க ஏற்பாடு செய்துகொள்வதே சிறந்த முறை என்று கூறியிருப்பதும் அனைவரும் அறிவர்.

அனேகமாக ஒரு கிழமைக்குள், பிரஜா-சோஷலிஸ்டு கட்சியின் கமிட்டி, தி. மு. கழகப் பொதுச்செயலாளரைச் சந்தித்துப் பேசக்கூடும் என்று தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 8—10—'56 திங்கள்

முப்பதாண்டு குத்தகை

[II]

ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சிக்கு எதிராக, அனைத்திந்திய ரீதியில் ஒரு எதிர்க்கட்சி உருவாவதற்கான சூழ்நிலை அல்லது பக்குவம் இந்தியத் துணைக்கண்டத்தில் இன்று இருக்கவில்லை என்பதை நேற்று சுட்டிக்காட்டி இருந்தோம். அதேநேரத்தில், ஆளும் கட்சியை விரட்டிவிட்டு அப்பொறுப்பை வேறு ஒரு கட்சி கைப்பற்றக்கூடிய நிலைமை இல்லாததினால், ஆளும் கட்சிக்கு இயல்பாக ஏற்படக்கூடிய இறுமாப்பையும் எடுத்துக்காட்டி இருந்தோம். இதை வலியுறுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நேரு, அகமதாபாத் மாணவர்களிடை இழிதன்மையில் ஏசிய புன்மதியையும் சுட்டிக்காட்டி இருந்தோம். நிற்க,

ஆளும் கட்சியை விரட்டிவிட்டுப்பதவியைக் கைப்பற்றக்கூடிய தன்மையில் உள்ள எதிர்க்கட்சி இல்லாக்குறை, ஆளும் கட்சியைத் தலைவீக்கம் அடையச் செய்வதுடன் நின்றுவிடுவதில்லை. அரசியல் குழப்பத்தையும் தெளிவற்றத் தன்மையையும், மக்களிடை எதிர்க்கட்சி இல்லாக் குறைபாடு உருவாக்கிவிட ஏதுவாகிறது.

இதை மேலும் கொஞ்சம் விளக்கமாகக் குறிப்பிடுவோம்.

பார்லிமெண்ட் சனநாயக முறையில், பொதுத் தேர்தலில் இரண்டோ அல்லது மேற்பட்ட கட்சிகளோ போட்டியிடுவது இன்றியமையாததாகும். பார்லிமெண்டரி சனநாயக முறையின் முழு வெற்றிக்கும் அதுவே உகந்த முறையாகும்.

காங்கிரஸ் ஆட்சியாளர்கள் செய்கின்ற தவறுகளில் அல்லது தவறு எனப் பெரும்பாலான மக்களால் கருதப்படும் ஆட்சியாளர்களின் செயல்முறைகளில், பெரும்பாலான மக்களுக்குப் பலமான அதிருப்தி ஏற்படுவதாக வைத்துக்கொள்ளுவோம்.

அவ்வாறு உருவாகும் அதிருப்தி, ஆட்சியில் இருப்பவர்களைப் பதவியிலிருந்து விரட்டிவிட்டு, அந்த இடத்தில் வேறு எதிர்க்கட்சியை ஏற்றுவதில் தான் முடிவுபெறும். இம்முடிவு ஒழுங்காக நிறைவேறுவதற்குரிய வாய்ப்பும் வசதியும் பொதுமக்களுக்குக் கண்டிப்பாக இருந்தாக வேண்டும். அந்நிலையில்தான் பொதுமக்களின் விருப்பும் வெறுப்பும் தெளிவாக வெளிப்படுவது இயலக்கூடும்.

இத்துறையில், ஆளும் கட்சியைப்பற்றியத் தங்களுடைய விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்துவதற்குரிய வாய்ப்பை மட்டுமேதான், பொதுத் தேர்தல் நேரத்தில் பொதுமக்கள் பெறுகின்ற தன்மையில் நிலைமை இருந்துவருகிறது. தங்கள் உள்ளக்கிடக்கையைத் திட்டவட்டமாக வெளிப்படுத்தக்கூடிய அரிய வாய்ப்பான பொதுத் தேர்தலை மட்டும்தான் இப்பொழுது பொதுமக்கள் பெற்றிருக்கின்றார்களே அல்லாது, தங்கள் விருப்பத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய வசதியான தேர்தலில் பங்கு கொள்ளும் மாற்றுக் கட்சியைப் பெற்றிருக்கவில்லை. அதாவது, ஆளும் கட்சிக்கு எதிராகத் தாங்கள் கொண்டுள்ள எதிர்ப்பையும், வேறு கருத்தின் மீது தங்களுக்குள்ள விருப்பத்தையும் உருவான செயல் மூலம் தெளிவாக வெளிப்படுத்துவதற்குரிய அரிய வசதி, இன்றுள்ள நிலையில் பொது மக்களுக்கு அறவே இருக்கவில்லை.

இந்த வசதி இல்லாக் குறையின் காரணமாகத் தாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், ஆளும் கட்சியையே ஆதரித்துத் தீரவேண்டிய கட்டாயத்தில் பொது மக்கள் இருந்து வருகிறார்கள். இதே வசதி இன்மையை, மாற்று ஏற்பாடு இல்லாமையை, ஆளும் காங்கிரஸ் கட்சியும் பொதுத் தேர்தலில் தனக்குச் சாதகமாக ஆக்கிக்கொள்ளுகிறது. எனவே, காங்கிரஸ் கட்சியிடம் இருந்து வருகிற அதிகாரத்தைப் பொதுத் தேர்தல் மூலம் பெரும்பாலான மக்களின் ஒப்புதலுடன் பறித்துக் கொள்ளக்கூடிய பலம் பொருந்திய மாற்றுக்கட்சி உருவாகிற வரையில், ஆளும் பொறுப்பு காங்கிரஸ் கட்சியிடம்தான் சிக்கிக்கிடக்கும் என்பதுடன், பெரும்பாலான மக்களின் உண்மையான விருப்பம் செயல்படுவதற்கும், மக்களாட்சி முறை சிறப்படைவதற்கும், இந்தியத் துணைக்கண்டத்தில் இடமிருக்கப் போவதில்லை என்பது முக்காலும் உண்மையாகும்.

எனவே, பொதுத் தேர்தல் என்பதும், வயது வந்தவர்கள் அனைவரும் வாக்குரிமை பெற்றிருப்பது என்பதும், இந்தியத் துணைக்கண்டத்தில் உண்மையான மக்களாட்சிமுறை செயல்பட்டு வருகிறது என்பதற்கு நற்சாட்சியாகாது. காங்கிரஸ் கட்சி சனநாயக அடிப்படையில்தான் பொதுமக்களிடமிருந்து அதிகாரத்தைப் பெற்று இந்தியத் துணைக் கண்டத்தை ஆண்டு வருகிறது என்றக் கருத்தும், வெறும் ஏமாற்றுப் பேச்சேயாகும்.

காங்கிரஸ் கட்சியிடம் சிக்கியுள்ள அதிகாரத்தைப் பறித்து வேறு ஒரு கட்சியிடம் ஒப்படைக்கக் கூடிய விதத்தில் அதற்கேற்ற மாற்றுக்கட்சி அமைப்பு இல்லாததின் பலனாக, ஆட்சியாளர்கள் செய்யும் தவறுகளிலிருந்து தங்களை மீட்டுக்கொள்ள வேண்டிய கட்டாய நிலைமை ஏற்படுகிற பொழுது, ஆட்சியாளர்களுக்கு எதிராக நேரடி நடவடிக்கைகளில் இறங்கவேண்டிய கட்டாயம் பெரும்பாலான மக்களுக்கு ஏற்படுவது இயல்பேயாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெற்றுவரும் அரசியல் ஆர்ப்பாட்டங்கள் பலவற்றிற்கும், மக்களிடம் வேரூன்றிக் கிடக்கும் இம்மனநிலையே பெரிதும் காரணமாகும். இதற்கு முழு அளவில் பொறுப்பேற்க வேண்டியது காங்கிரஸ் கட்சியேயாகும்.

கதியற்ற நிலையில் பொதுமக்களால், ஆட்சியாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நேரடி நடவடிக்கைகள், விரும்பத்தகாதது — கண்டிக்கத்தக்கது என இந்தியப் பிரதமர் போதிக்கிறார்— இல்லை—வசைபாடுகிறார்.

சோவியத் சர்க்கஸ்!

புதுடில்லி, அக். 5—

சோவியத் ரஷ்யாவில் இருந்து சிறந்த சர்க்கஸ் கலைஞர்கள் 50 பேர் அண்மையில் இந்தியா வருகின்றனர். இரண்டு மாத காலம் அவர்கள் இந்தியாவைச் சுற்றிவருவார்கள்.

ஐ. நா. சபைத தலைவர் இந்தியா வருகை

புதுடில்லி, அக். 6—

ஐக்கிய நாடுகளின் சபைத் தலைவர் டாக்டர் ஜோசப் மாஸா, இந்தியாவிற்குவந்து 9 நாட்கள் தங்குவார் எனத் தெரிகிறது.

அங்கிருந்து வருகிறார்!

புதுடில்லி, அக். 4—

தற்போது ஆஜ்மீர் ஆணையாளராக இருந்துவரும் கிருபளானி, புதுவை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நவம்பர் மாதம் பதவி ஏற்க வருவார்.

ஆயுத பலம் குறையாது

அமெரிக்க ஜனாதிபதி அறிவிப்பு

வாஷிங்டன், அக். 5—

அமெரிக்காவின் இராணுவ பலம் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. ஆயுதப் படை பலத்தைக் குறைக்கும் உத்தேசம் இல்லை என்று ஐசனோவர் நிருபர்கள் கூட்டத்தில் அறிவித்தார்.

இரப்பர் கள்ளக் கடத்தல்

சீனர் பிடிபட்டனர்

ஜகார்தா, அக். 5—

இந்தோனேஷியாவில் இருந்து கள்ளத்தனமாக 25,00,000 டன் இரப்பரை சீனர்கள் கடத்திச் செல்லுகையில் இந்தோனேஷிய போலீசார் கண்டுபிடித்துக் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டவர்களைக் கைது செய்ததாகத் தெரிகிறது.

இந்திய வர்த்தகப் பொருள்கள் கண்காட்சி

நைரோபியில் நடைபெறும்

புதுடில்லி, அக். 4—

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு, முக்கியமாக, சைக்கிள்கள், ஜவுளிகள் போன்ற உபயோகப் பொருள்களின் கண்காட்சி ஒன்று நைரோபியில் 1956 டிசம்பர் 22-ந் தேதியிலிருந்து இரண்டு வார காலத்துக்கு நடைபெறும்.

கண்காட்சி ஆறு பிரிவுகளைக் கொண்டதாக இருக்கும். இந்திய வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைச் சித்தரிக்கும் வெளியீடுகள் அடங்கிய தனி பிரிவொன்றும் அதில் அடங்கியிருக்கும்.

20 கோடி கால்நடைகள்

புதுடில்லி, அக். 6—

இந்தியாவில் 16 கோடி ஆடுமாடுகளும், $4\frac{1}{2}$ கோடி எருமை மாடுகளும் இருக்கின்றன என்று இந்திய அரசாங்கம் கணக்கெடுத்திருக்கிறது. இதன் மதிப்பு 3,000 கோடி ரூபாயாகும். உலகத்தில் உள்ளதில் 5-ல் ஒரு பங்கு கால்நடைகள் இந்தியாவில் உள்ளதாம்.

சிறைச்சாலையாகிறது!

திரு-கொச்சி மாநிலங்கள் முழுதும் 'சப்-ஜெயில்கள்' ஏற்படுத்தும் திட்டத்தை முன்வைத்து 29 போலீஸ் 'லாக் அப்'கள், 'பி' வகுப்பு சிறைச்சாலையாக்கப்பட்டுள்ளது.

இனியும் பொறுக்கமுடியாதாம்!

மத்திய அமைச்சர் எச்சரிக்கிறார்

பாட்னா, அக். 5—

"பம்பாய் வர்த்தகர்களில் சிலர் சமூகத்திற்கும், நாட்டிற்கும் விரோதமாக உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்திருப்பதும், கோவா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதிக இலாபம் அடைய முயன்று வருவதும் எனக்குத் தெரியும்" என்று, மத்திய அமைச்சர் ஏ. பி. ஜெயின், பீகார் மாநில வர்த்தகர் சங்கச் சார்பில் இங்கு தமக்களிக்கப்பட்ட வரவேற்பு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சமுதாயத்தைத் தவிக்கவிட்டு, இலாபம் சம்பாதிப்பதைத் தான் ஒருபோதும் பொறுத்திருக்கமுடியாதென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்!

மேலும் அவர், அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, இத்தகைய வியாபாரிகளை ஒடுக்கும் என்றும் அறிவித்தாராம்!

அரசாங்க பஸ் நிர்வாகம்

ஆகஸ்டு மாதம் ரூ. 12,81,000 வருமானம்

சென்னை, அக். 5—

சென்னை அரசாங்கம் எடுத்து நடத்தும் பஸ் நிர்வாகத்தின் மூலம் ஆகஸ்டு மாதம் ரூ. 12,81,000 வருமானம் கிடைத்துள்ளதாம். தினசரி 307 பஸ்கள் மொத்தம் 11,81,700 மைல்கள் ஓடியுள்ளனவாம். மொத்தம் 1,06,52,756 பேர்கள் பிரயாணம் செய்துள்ளனராம். தற்போது மொத்தம் 438 பஸ்கள் தயாராக சென்னை அரசாங்க நிர்வாகத்தின்கீழ் உள்ளனவாம்.

செங்கற்பட்டு மருத்துவ விடுதி

விரிவுபடுத்தும் வேலைகள்

சென்னை, அக். 4—

செங்கற்பட்டு மாவட்டத் தலைமை மருத்துவ விடுதியை விரிவுபடுத்தி, மேலும் 200 நோயாளிகளுக்குப் படுக்கை வசதி ஏற்படுத்தித் தரும்வகையில், ஒரு புதிய கட்டிடம் கட்டுவதென முடிவு செய்யப்பட்டு, அதற்கான வேலைகளும் நடந்துவருகின்றனவாம்!

எந்தப் பொருட்காட்சியோ

சென்னை, அக். 4—

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் சீனாவில், இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள பொருட்களை விளம்பரப்படுத்த இந்திய சர்க்கார், பொருட்காட்சி ஒன்று அமைக்க முடிவு செய்துள்ளதாம். இதனால், இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையே நல்ல வர்த்தக உறவு ஏற்படும் என்றும் நம்பப்படுகிறதாம்.

விசைத் தறிக்கு எதிர்ப்பு

காஞ்சீபுரம், அக். 6—

சென்னை அரசாங்கம் விசைத் தறி புகுத்துவதை எதிர்த்து, சோஷலிஸ்டுக் கட்சியின் ஆதரவில் நடைபெற்றக் கூட்டத்தில தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது

தொழில் திட்ட ஆலோசனைக்கு ரஷ்ய நிபுணர்கள்!

புதுடில்லி, அக். 5—

ரஷ்யாவிலிருந்து மேலும் ஐந்து புதிய நிபுணர்கள் இந்தியா வந்துள்ளனர் என்றும், இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்படவிருக்கும் மகத்தான தொழில் திட்டங்களுக்கு அவர்கள் ஆலோசனை தருவார்கள் என்றும் கூறப்படுகிறது.

பெரிய இயந்திரத் தொழிற்சாலை நிறுவனம், சுரங்கத் தொழிற்சாலை, இரும்பு—எஃகுத் தொழிற்சாலைகள் நிறுவனம் சம்பந்தமாக ரஷ்ய நிபுணர்கள் இந்திய அரசாங்கத்திற்குத் திட்டம்வகுத்துத் தந்து சிபாரிசு செய்வார்களாம்!

விவசாய முன்னேற்றத்திற்கு முதலிடமாம்

அமைச்சர்பக்தவத்சலம்அறிவிப்பு

திருநெல்வேலி, அக். 2—

"இம்மாநிலத்தில் இதுவரை தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் கிணறு வெட்டுதல், ரோடு அமைத்தல், கட்டிடம் கட்டுதல் போன்ற வேலைகளே நடைபெற்று வந்தன. இனிமேல் விவசாய அபிவிருத்திக்கு முக்கியமான இடம் ஒதுக்கப்படும்," என்று அமைச்சர் பக்தவத்சலம் இங்கு கூறியிருக்கிறார்.

வேண்டுகோள் விடுத்துள்ளனராம்!

திருநெல்வேலி, அக். 4—

தற்போது கோழிக்கோட்டில் உள்ள மீன் ஆராய்ச்சி நிலையம் மாநிலப் புனரமைப்பு காரணமாகக் கேரள மாநிலத்திற்குச் சொந்தமாகிவிடுகிறது.

எனவே, தமிழ் நாட்டில் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் ஒரு மீன் ஆராய்ச்சி நிலையம் நிறுவ வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தாருக்கு சென்னை சர்க்கார் வேண்டுகோள் விடுத்துள்ளதாக, அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்துள்ளார்.

தொழில்பயிற்சி நிலையங்கள்

ஈரோடு, அக். 6—

நோய் குணமாகி வைத்திய விடுதியை விட்டு வெளியேறும் க்ஷயரோக நோயாளிகளைக் குடியமைப்பு செய்யும் நிலையங்கள் ஏற்படுத்த இந்திய அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக இந்திய அரசாங்க சுகாதார இலாகா உதவி அமைச்சர் கூறினார்.

இந்த நிலையங்களில் சிறு கைத்தொழில்களில் பயிற்சியளிக்கப்படுமாம். பின்னர் அதை அவர்கள் தொடர்ந்து நடத்தப் பொருளாதார உதவியும் அளிக்கப்படுமாம்.

புதிய சென்னை மாநில சட்டசபையில்

191 உறுப்பினர் அங்கம் வகிப்பர்

தற்போது சென்னை சட்டசபையில் 231 பேர் உள்ளனர். வருகிற நவம்பர் முதல் தேதியன்று புதிய மாநிலம் உருவானதும், சென்னை சட்டசபையில் 40 இடங்கள் குறைகின்றன. இந்த 40 பேர்களில் மைசூர் மாநிலத்திற்கு 10 பேரும், கேரளத்திற்கு 30 பேரும் சென்றுவிடுவர்.

நவம்பர் திங்கள், முதல்சென்னை சட்டசபையில் 190 எம்.எல் ஏ.-க்களும், ஒரு நியமன உறுப்பினரும் ஆக 191 பேர்களே அங்கம் வகிப்பார்கள்.

அடுத்தப் பொதுத் தேர்தலுக்குப் பிறகு; 205 எம்.எல் ஏ -க்களும், ஒரு நியமன உறுப்பினருமாக மொத்தம் 206 பேர் அங்கம் வகிப்பார்கள்.

பொதுத் தேர்தலுக்குத் தொகுதிகளை விரிவுபடுத்தியிருப்பதே இந்த எண்ணிக்கை அதிகரிப்பிற்குக் காரணம் என்று தெரிகிறது.

'இருட்டடிப்பு' எதிர்ப்பு

சந்திரநாகூர், அக். 4—

மின்சாரக் கட்டண உயர்வை எதிர்த்து சந்திரநாகூர் மக்கள் இன்றிரவு மின்சார விளக்குகளை ஒதுக்கிவிட்டு, 'இருட்டடிப்பு' செய்தனர்.

வியாபாரிகள் 'காஸ் - லைட்'டும், வீடுகளில் மண்ணெண்ணெய் விளக்கும், மெழுகுவத்தியும் உபயோகித்தனர்.

3 சினிமா தியேட்டர்கள் மூடிக்கிடந்தன.

கொள்கை வீரன் கே. வி. கே. சாமி மறைவுக்கு

தமிழகமெங்கும் அஞ்சலி!

★

நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. வி. கே. சாமி அவர்களின் மறைவு குறித்து 30—9—56-ம் நாளன்று நாடெங்கிலுமுள்ள கிளைக் கழகங்களும், திராவிட முன்னேற்றக் கழகத் தொடர்புள்ள படிப்பகங்களும், மன்றங்களும் அனுதாபக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துமாறு கேட்டுக்கொண்ட பொதுச்செயலாளரின் அறிக்கைக்கிணங்க, அன்று தமிழகம், மற்றும் பம்பாய், மலேயா, இலங்கையிலுமுள்ள தி. மு. கழகக் கிளைகள், மன்றங்கள், படிப்பகங்கள், தங்கள் தங்கள் அனுதாபங்களைத் தெரிவிக்கும் வகையில், மௌன ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றை நடத்தி, தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. அவற்றுடன் மட்டுமின்றி, தோழர் சாமி அவர்கள் கழகத்திற்காற்றிய நற்பணி குறித்தும், அவருடைய கொள்கைப்பற்று, இலட்சியம் ஆகியவை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கம் தரும் வகையில் சொற்பொழிவுகளும் நிகழ்த்தியிருக்கின்றனர். அந்தக் கூட்டங்கள், ஊர்வலங்கள், நிகழ்ச்சிகளையெல்லாம் இடம் போதாமையின் காரணமாகச் சுருக்கி, நிகழ்ச்சிகளை மட்டும் வெளியிட்டிருக்கிறோம்.

புதியம்புத்தூர்:

தோழர் ப. அ. நா. ஆனப்பன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

சோழவந்தான்:

மாலை 6 மணியளவில் கிளைக் கழகத்தில் கூட்டம் நடைபெற்றது.

சமயநல்லூர்:

இரவு 8 மணியளவில் தோழர் எஸ். இராமச்சந்திரன் இல்லத்தில் கூட்டம் நடைபெற்றது.

விழுப்புரம்:

மாலை 6 மணிக்கு, மந்தகரை மைதானத்தில், தோழர் சு. முத்துராமன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

முத்துப்பேட்டை:

காலை 10 மணிக்கு' தோழர்கள் கருப்புச்சின்னம் அணிந்து சைகிள்களில் மௌன ஊர்வலம் வந்தனர்.

திண்டிவனம்:

கிளைக் கழகத்தில், செயலாளர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இராபர்ட்சன்பேட்டை: (கோலார் தங்கவயல்)

மாலை 5 மணிக்கு தோழர் பி. கோவிந்தன் தலைமையில் கிளைக் கழகத்தில் நடைபெற்றது.

திருக்காட்டுப்பள்ளி:

மாலை $5\frac{1}{2}$ மணியளவில் கழக இல்லத்தில் தோழர் ப. கலியபெருமாள் தலைமையில் நடைபெற்றது

திருவாரூர்:

காலை 10 மணிக்கு, கருணாநிதி அச்சக மாடியில் கூட்டம் நடைபெற்றது.

வேலூர் (வ. ஆ.):

தோழர் அ. பாலகிருஷ்ணன் தலைமையில் கழக இல்லத்தில் கூட்டம் நடைபெற்றது.

* * *

மாலை 4 மணிக்கு சைதாப்பேட்டை குப்பாச்சாரி தெரு எண் 16. இல்லத்தில் தோழர் சி. ஆர். பாபு தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

காஞ்சிபுரம்:

மாலை 6 மணியளவில், கெங்கைகொண்டான் மண்டபத்தருகில் தோழர் செ. சடையாண்டி தலைமையில் நடைபெற்றது.

கீழைஈரால்:

இரவு 8 மணிக்கு, முத்தாலயம்மன் திடலில் வேல் வெள்ளைச்சாமி ஞாபகார்த்த மன்றத்தின் சார்பில் தோழர் பெ. ரா. சின்னசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பெங்களூர்:

பகல் 1 மணிக்கு பைந்தமிழ் மன்ற இல்லத்தில் தோழர் ஜி. சீனிவாசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

சின்னசேலம்:

அன்று மாலை, தோழர் கோபால் மிதிவண்டி நிலையத்தில் தோழர் பொ. அருணாசலம் தலைமையில் நடைபெற்றது.

தண்டுரை பட்டாபிராம்:

கிளைக் கழகத்தில் கூட்டம் நடைபெற்று அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கொரடாச்சேரி:

கிளைக் கழகத்தில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

கள்ளக்குறிச்சி:

மாலை 6 மணிக்கு, தோழர் சி. முனுசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கோவை:

காலை 10 மணிக்கு, 12-வது வட்டக் கிளைக் கழகத்தில் தோழர் இரா. வீ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

எட்டயபுரம்:

தோழர் மு. சந்தனவேல் தலைமையில் கிளைக் கழகத்தில் கூட்டம் நடைபெற்றது.

ஆவல்சூரன்பட்டி:

இரவு 7 மணிக்கு மௌன ஊர்வலமும், தோழர் செகநாதன் தலைமையில் கூட்டமும் நடைபெற்றது.

இராமநாதபுரம் (கோவை)

மாலை 6 மணிக்கு கிளைக் கழகத்தில் தோழர் இராசநாயகம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பெங்களூர்—சீராமபுரம்:

மாலை 6 மணிக்கு, பெங்களூர் மாவட்டக் கழகச் சார்பில் வ. உ. சி. திடலில் தோழர் எஸ். வி. பதி தலைமையில் நடைபெற்றது தோழர்கள் எஸ். ஜே. உசேன், வில்லவன்கோதை, சு. கண்ணன், ஜெ கனகசுந்தரம், வி. முத்து, பாண்டியன், எம். கிருட்டிணன், ப. செல்வராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பொன்னிரை:

இரவு 7 மணிக்கு, தோழர் கே. சுப்பராயலு இல்லத்தில் கூட்டம் நடைபெற்றது.

சத்திரப்பட்டி:

தி. மு. கழகத் தோழர்களும், தி. மா. மு. கழகம், வள்ளுவர் நாடக மன்றம், சிலம்பு நாடக மன்றம், மருந்துவாழ்மலை கிளைவு நாடக மன்றம், அழகை எம். பொன்னுசாமி உடற் பயிற்சிக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த தோழர்களும் கருப்புச் சின்னங்களுடன் சங்கரபாண்டியபுரம், சமுசிகாபுரம் ஆகிய ஊர்கள் வழியாக ஊர்வலம் வந்தனர். சத்திரப்பட்டி நெசவாளர் சங்க நிலயத்திற்கு முன் கூட்டம் நடைபெற்றது.

பணகுடி:

காலை 11 மணிக்கு தி. மு. கழகப் படிப்பகத்தில் நடைபெற்றது.

ஆறுமுகநேரி:

காந்தி மைதானத்தில் தோழர் ச. கே. ஆதித்தன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். நடராசன் (தூத்துக்குடி), இல. அறவேந்தன், திலகராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பிச்சனூர்:

இரவு 9 மணிக்கு, இராசன்பண்ணையில், பகுத்தறிவு இளைஞர் மன்றச் சார்பில் கூட்டம் நடைபெற்றது.

திருச்சி:

திருச்சி தி. மு. கழக மாணவர் கிளையின் சார்பில் தோழர் புதுமைப்பித்தன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

காரைக்குடி:

இரவு 9 மணிக்கு, வள்ளுவர் படிப்பகத்தில் தோழர் கரு. இளந்தோழன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பெங்களூர்— அக்கிப்பேட்டை:

காலை 10 மணியளவில், தோழர் எஸ். வி. பதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அரக்கோணம்:

மாலை 5 மணிக்கு, தோழர் வி டி. சாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

சாத்தூர்:

இரவு 7 மணிக்கு நகரக் கழக அலுவலகத்திற்கு முன்னர் தோழர் பால்கிருஷ்ணன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மதுரை:

இரவு 8 மணிக்கு நகரக் கழகச் சார்பில் கீழமார்க்கெட் அண்ணா திடலில் தோழர் ப. இராமநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பொன்மலைப்பட்டி:

இரவு 7 மணிக்கு, தோழர் ஏ. கோவிந்தசாமி தலைமையில், கழக இல்லத்தில் நடைபெற்றது.

மானாமதுரை:

அன்று மாலை தோழர் து. உ. இராமநாதன் தலைமையில் கிளைக் கழகத்தில் கூட்டம் நடைபெற்றது.

திருச்சினம்பூண்டி:

அன்று மாலை கழக இல்லத்தில் தோழர் ஆர். கோவிந்தராசு தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

குரவப்புலம்— (தஞ்சை மாவட்டம்)

அன்றுமாலை கிளைக் கழகத்தில் கூட்டம் நடைபெற்றது.

மதுரை:

இரவு 10 மணிக்கு, இலக்குமிபுரம் முத்து படிப்பகத்தில் தோழர் கே. சி. இராமசாமி தலைமையில் நடைபெற்றது.

* * *

காலை 10 மணிக்கு, ஆரப்பாளையம் லால்குடி நடராசன் நினைவுப் படிப்பகத்தில் தோழர் பெ. முத்து தலைமையில் நடைபெற்றது

கணியூர்:

இரவு 8 மணிக்கு, அழகிரி மன்ற அலுவலகத்தில் தோழர் கே. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

கிழக்குயில்குடி:

இவ்வூர் இளைஞர் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பொட்டனேரி:

மாலை 2 மணிக்கு கிளைக் கழகத்தில் கூட்டம் நடைபெற்றது.

திருவைகுண்டம்:

தோழர் வ. செகவீரராசேந்திரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தஞ்சாவூர்:

மாலை 4 மணிக்கு கீழவாசல் வண்டிப்பேட்டையிலிருந்து மௌன ஊர்வலம் நடைபெற்று திலகர் திடலில் தோழர் ஏ. வி. பதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஜி பராங்குசம், கு. சுல்தான் ஆகியோர் பேசினர்.

மதுக்கூர்:

மாலை 4 மணிக்கு பி. டபிள்யூ. டி. அலுவலகத்திலிருந்து மௌன ஊர்வலம் புறப்பட்டது. கலைமணி தியேட்டரில் தோழர் ஆர். வி. எஸ் மணி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அமுது (சுயே.), ஆனந்தராசன் (த. க.), முகமது யூசுப் (தமிழியக்கம்), வ. கணேசன் (சுயே), சாமி (தி. க) பிச்சைக்கண்ணு (தொ. இ) ஆகியோரும் தோழர் யாக்கூப்பும் சொற்பொழிவாற்றினர்.

வேலகவுண்டம்பட்டி:

பகல் 3 மணிக்கு, தோழர் வி எஸ். குப்புசாமி சைக்கிள்கடையில் கூட்டம் நடைபெற்றது.

பண்ணுருட்டி:

மாலை 5 மணிக்கு, உயர்நிலைப் பள்ளியிலிருந்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில், தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., தர்மாஞ்சுலு ஆகியோர் அணி வகுத்து வர மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. மாலை 6 மணிக்குப் பொதுக்கூட்டத்தில் தோழர் ஜெ தாமாஞ்சலு தலைமையில் அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வி. கிருஷ்ணமூர்த்தி, ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஆகியோர் பேசிய பின், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் அனுதாப உரை நிகழ்த்தினர்.

பெங்களூர் – அலசூர்:

காலை $10\frac{1}{2}$ மணி அளவில், தோழர் தி. மு. குலசேகரன் தலைமையில் அறிவு வளர்ச்சி மன்றத்தில் கூட்டம் நடைபெற்றது.

திருப்புத்தூர் (இ. மா.):

அன்று மாலை மௌன ஊர்வலமும், அனுதாபப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. சர்வ கட்சித் தோழர்களும் கலந்துகொண்டனர். தோழர் எஸ். எஸ். தென்னரசு பேசினர்.

திருப்பூர்:

அன்று மாலை கொய்யல் நதி மைதானத்தில் தோழர் பால்ராசு தலைமையில் நடைபெற்றது தோழர்கள் க. அன்பழகன், பல்லடம் எம். பொன்னுசாமி ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தினர்.

ஆ. தெக்கூர்:

அன்று மாலை மௌன ஊர்வலமும் அனுதாபக் கூட்டமும் நடைபெற்றது.

சென்னை–12-வது வட்டம்:

காலை 10 மணிக்கு தோழர் கண்ணப்பனார் தலைமையில் கழகப் பணிமனையில் கூட்டம் நடைபெற்றது. தோழர் சாமியின் நினைவாகக் கழகப் பணிமனையில் ஒரு நூலகம் திறப்பதென முடிவு செய்யப்பட்டது.

* * *

காலை 10 மணியளவில், சென்னை பைராக்குஜன் பகதூர் தெரு, பகுத்தறிவுப் பாசறையில் தோழர் அன்புவேலன் தலைமையில் நடைபெற்றது.

* * *

இராயப்பேட்டை சுந்தரேசுவரர் கோயில் தெரு, எண் 8 ஏ., இல்லத்தில் அமைக்கப்பெற்றுள்ள பெண்கள் படிப்பகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கீரப்பாளையம்பஞ்சாயத்தில் அனுதாபத் தீர்மானம்:

8—10—56ல், கீரப்பாளையம் பஞ்சாயத்துக் குழுவின் அவசரக் கூட்டம் பஞ்சாயத்துத் தலைவர் ஏ. கே. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தோழர் சாமி அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இராமநாய்க்கன்பட்டி

கிளைக்கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

சேலூர்:

2—10—56 இரவு 8 மணிக்கு தோழர் சி. என். சானகிராமன் தலைமையில் அழகிரி மன்றத்தில் கூட்டம் நடைபெற்றது.

பம்பாய்—மாதுங்கா:

2—10—56ல், தோழர் இ. சு. ச. பிச்சையா தலைமையில் கழக இல்லத்தில் நடைபெற்றது.

பெரியகுளம்:

22—9—56 மாலை 4 மணிக்கு தோழர்கள் அனைவரும் கருப்புச் சின்னமணிந்து மௌன ஊர்வலமாக வந்தனர். கழகக் கொடிகள் அனைத்தும் தாழப் பறக்கவிடப்பட்டன. ஊர்வலத்தில் அருகிலுள்ள ஊர்களைச் சேர்ந்த தோழர்களும் கலந்துகொண்டனர். கழக அலுவலகத்தின்முன் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

புலியகுளம்:

24-9-56ல் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பிரான்மலை:

29—9—56-ல், கல்யாண மண்டபத்தில் நடைபெற்றக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாண்டுப்—பம்பாய்:

26—9—56 பகல் 2 மணிக்கு தோழர் இராசமணி இல்லத்தில் நடைபெறவிருந்த திராவிட நாடு பிரிவினை நாள் கூட்டம் அனுதாபக் கூட்டமாக மாற்றப்பட்டு, இரண்டு நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சுண்டக்காம்பாளையம்:

28—9—56ல் கிளைக் கழகத்தில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றுத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஈரோடு:

3—10—56 காலை 11 மணிக்கு ஈரோடு நகர திராவிட கூவரத் தொழிலாளர் சங்க மாதாந்திரக் கூட்டம் திரு. கே. வீரகேசரி தலைமையில் நடைபெற்றபோது, அனுதாபம் தெரிவித்துக்கொண்டு, சில நிமிட நேரம் மௌனமாக இருந்து இறுதி மரியாதையும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பூவிருந்தவல்லி:

23—9—56ல் தோழர் டி. இராசரத்தினம் தலைமையில், பூவிருந்தவல்லி, திருமழிசை, கன்டோன்மென்ட், காட்டுப்பாக்கம், ஆலப்பாக்கம், மூன்றுங்கட்டளை, நசரத்பேட்டை, மாங்காடு ஆகிய கிளைக் கழகத் தோழர்கள் மாங்காட்டிலிருந்து மௌன ஊர்வலம் புறப்பட்டு பூவிருந்தவல்லியில் கூட்டமும் நடத்தினர்.

தாராபுரம்:

1—10—56 மாலை 6 மணிக்கு தாராபுரம் இஸ்லாமியா பேட்டையில் தோழர் ஏ. முருகேச தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. ஏ. மதியழகன், க. அன்பழகன், பல்லடம் பொன்னுசாமி ஆகியோர் பேசினர்.

தூத்துக்குடிக் கூட்டத்தில் அண்ணா

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"அரிய பள்ளிக்கூடம் ஒன்றைத் துவங்கி, அதற்குக் கட்டிடம் எழுப்பி, அந்தப் பகுதி மக்களுக்குக் கல்விக் கண் அளிக்கப் பெருமுயற்சி மேற்கொண்டார்.

"நகராட்சி மன்றத்தில் உறுப்பினராகி, நகர மக்களின் நலன்களுக்காகப் பாடுபட்டார்.

"இப்படி எந்தத் துறையிலும், எதை எடுத்தாலும் மக்களுக்கான காரியங்களைச் செய்வதில் சாமி, சாமி என்ற பெயர்தான் முன்னணியில் நின்றது. இப்படிச் சாமி பெற்ற வளர்ச்சி கண்டுப் பொறுத சில மாபாதகர்கள் — சாமியின் பணிகளைக் காணச் சகிக்காத படுபாதகர்கள்—இன்று, அவரைப் பலிகொண்டிருக்கிறார்கள்.

"இந்த வேதனையை ஊராராகிய உங்களால் தாங்கமுடியவில்லை; என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இப்படியிருக்கும்போது, சாமியைப் பெற்ற பெரியவருக்கு எதைச் சொல்லி ஆறுதல் கூறுவது?

"அதனால்தான் நான், 'என்னை உங்கள் மகன் சாமியாக ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று சொன்னேன், அவரது தந்தையிடம்.

"தோழர் சாமி அவர்கள், கழகத்தின் துவக்க காலத்தில், எதிர்ப்பிருந்த காலம் முதலே, பல்வேறு எதிர்ப்புகளையும் சமாளித்து, கழகத்திற்காகப் பாடுபட்டு வந்தவர்.

"அவர் அடைந்திருந்த ஆற்றலையும் ஆற்றிவந்த அரும்பணிகளையும், இனி அவரைப்போல் ஒரே ஒரு நபரால் முடியாது; நம்மில் பலர் சேர்ந்தேனும் அவர் காட்டிய வழி நடந்து, அவர் ஆற்றிய பணிகளைத் தொடர்ந்து செய்வோம் என்று இங்குள்ள கழகத் தோழர்கள் சூளுரைத்துக் கொள்ள வேண்டும்.

"எந்த நேரத்திலும், நம்மையும் சாமிக்கு நேர்ந்த கதிக்கு ஆளாக்க, நம் நாட்டிலேயே சிலர் இருக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை.

"காந்தியாரைப் பாதகன் ஒருவன் பிரார்த்தனைக் கூட்டத்திலேயே கொல்லவில்லையா? லியாகத் அலிகானை பொதுக் கூட்டத்தில் வைத்தே கயவன் ஒருவன் சுட்டு வீழ்த்தவில்லையா? இப்போது நமக்குக் கிடைத்த ஊழியன், இதுபோன்றே செல்லப் படுவது, நம் நாட்டில் வளர்ந்துள்ள காட்டுமிராண்டித் தனத்தையல்லவா காட்டுகிறது?

"பாவிகள், பதினெட்டுக் காயங்களை உண்டுபண்ணினார்களாம் சாமிக்கு. பொதுச்செயலாளர் கூறக்கேட்டுப் பதறிப்போனேன். என்னதான் கொடுமை செய்தார் சாமி, இப்படிச் சாவதற்கு?

"நகரசபை உறுப்பினராகப் பணியாற்றினாயே— அதற்காக ஒன்று! பள்ளிக்கூடம் கட்டினாயே—அதற்காக ஒன்று! தி. மு. கழகத்தின் காவலனாயிருந்தாயே—அதற்காக ஒன்று! தொழிலாளருக்காகப் பாடுபட்டாயே—அதற்காக ஒன்று என்று, எண்ணி எண்ணிக் குத்தினரோ பாவிகள்! அவர்களுக்குச் சாமி என்னதான் கேடு செய்தார்?

"இந்தக் காட்டுச் சூழ்நிலை எப்படி வளர்ந்தது? இதை எப்படி நாம் அனுமதிப்பது?

"சாமியின் கொலைக்கான காரணங்களில் எனக்குத் தெரியாவிட்டாலும், ஒன்றை நான் கூறமுடியும். சாமியின்வளர்ச்சி பலரது கண்களை உறுத்திக் கொண்டிருந்தது என்பதுதான் அது.

"கையிலிருந்து நழுவிவிட்ட 100 ரூபாய் நோட்டைக் கழுதை மென்று தின்றுவிட்டதால், கழுதைக்கு இலாபம் ஒன்றும் இல்லை; நமக்குத்தான் நஷ்டம்.

"அதைப்போல, சாமியைக் கொன்றவர்களுக்கு அதனால் இலாபம் ஏதும் இருக்கமுடியாது; நமக்குத்தான் நஷ்டம் என்பதையும் அந்தப் பாவிகள் உணரட்டும்.

"இப்போது நாம் சிந்தும் கண்ணீர்த் துளிகள் சாதாரண மானவையல்ல; அந்தக் கண்ணீரிலிருந்து பிறக்கும் சக்தி, ஆற்றல் மிகுந்தது என்பதையும் அவர்கள் உணரட்டும்.

"நான் இதுபோன்றக்கொடுமைகளைத் தாங்கிக்கொள்ள முடியாதவன். தி. மு. கழகத்திலேயே நான் மிகமிகப் பஞ்சு உள்ளம் கொண்டவன்!

"கத்தியினால் அல்ல—புத்தியினால் காரியம் சாதிக்கவேண்டும் என்ற கொள்கையுடையவன்.

"என்னை அழைத்துவந்து உங்களுக்கு ஆறுதல் கூறக் கேட்டிருக்கிறார்கள். ஆனால், எனக்கு நீங்கள் ஆறுதல்கூற வேண்டிய நிலையில்தான் நானிருக்கிறேன்.

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று நான் கூறியது, இதுபோன்றப் படுபாதகங்களைத் தாங்கிக் கொள்வதற்காக அல்ல! சர்க்காரின் துப்பாக்கி முனைக்குப் பலியாக நேரிட்டால், அதனைத் தாங்கிக் கொள்ளவேண்டும் என்றுதான் நான் கூறினேன். 32 வயது இளைஞன் இப்படிப் படுகொலை செய்யப்படுவதை நினைத்து அல்ல நான் கூறியது. இதை எப்படித் தாங்குவது?

"இந்தப் படுபாதகம் நிகழ்ந்த சூழ்நிலை, சாமி சார்ந்த ஒரு கட்சியின் பிரச்சினையல்ல. நாட்டு மக்களுக்குப் பொதுவானதோர் பிரச்சினை அந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட, காட்டுச் சூழ்நிலையை ஒழித்து, காட்டுமிராண்டித் தனத்தை அழித்து நாகரிகம் நிலவ எல்லோரும் பாடுபட இப்போது சூளுரைத்துக் கொள்ள வேண்டும்.

கழகக் கூட்டங்கள்

★

ஆலப்பாக்கம்:
(செட்டியார் அகரத்தில்)
10—10—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
அருண்மொழி
ஏ. கே. வில்வம்

★

பொன்மலைப்பட்டி:
வ. உ. சி. திடலில்
10—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். எஸ். மணி
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
ஏ. பி. தர்மலிங்கம்

திரு. வி. க., மறைமலை அடிகள் நினைவு நாள்

9—10—56 மாலை 6-மணிக்கு, சென்னை எஸ்பிளனேடு, ஒய். எம். சி. ஏ., பட்டிமன்றத்தில் திரு நாராணதுரைக்கண்ணன் தலைமையில் மேற்படி நினைவு நாள் கூட்டம் நடைபெறும். தோழர் ஸ்ரீபால் மற்றும் பலர் பேசுவர்.

பிறப்பு

நமது இயக்கத் தோழரும், 2-வது வட்ட தி. மு. கழக மாவட்டப் பிரதிநிதியுமான இராயபுரம் தோழர் கே. ஈ. சம்பந்தம் அவர்களின் துணைவியாருக்கு 4—10—56 அன்று பெண் குழந்தை பிறந்தது. தாயும், சேயும் நலம்

விலைவாசி ஏறிய காரணம்-பதுக்கல்!

'பதுக்கலை' ஒழிக்க மறுக்கும் காரணம் என்ன?

கள்ளமார்க்கட் கழுகுக்குக் காங்கிரஸ் கனிவு?

டி. டி. கே. நாடி பார்த்தார்; மருந்து இல்லை!

"அரிசி விலை அநியாயமாக ஏறிவிட்டது; இதற்குப் போதுமான காரணமே இல்லை; இந்த விலைவாசி ஏற்றம் வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ள விபரீதம்"

என்று, நிதி அமைச்சராக உயர்ந்திருக்கும் டி. டி. கிருஷ்ண மாச்சாரியார் கூறியிருக்கிறார்.

நல்ல வேளை! 'விலை எங்கே உயர்ந்துவிட்டது? அப்படியொன்றும் காணோமே! என்று முழுப் பூசணியைச் சோற்றில் மறைக்காமல், அரிசி விலை அநியாயமாக ஏறிவிட்டிருப்பது உண்மைதான், என்று டி. டி. கே. ஒப்புக்கொண்டு பேசி இருக்கிறார்; அதுவரையில் மகிழ்ச்சிதான்.

இந்த உண்மையை ஒப்புக்கொள்வதற்கே, இத்தனை காலம் பிடித்தது.

"விலைவாசி விஷம்போல் ஏறிவிட்டிருப்பதற்குக் காரணம், போதுமான அளவு உணவுப் பொருள் இல்லை என்பதல்ல, உள்ள பொருளை, கள்ளமார்க்கட்காரர் மறைத்து வைத்து விட்டதுதான்,"

என்று, டி. டி. கே. கூறுகிறார்.

கள்ள மார்க்கட்காரர் என்று கூறவும் மனம் இல்லை—பாபம்—விலைவாசி ஏற்றத்துக்குக் காரணம் பதுக்கல் என்று கூறியிருக்கிறார்.

சமூகத்துக்குச் செய்யக் கூடிய மாபெருந் துரோகம், பதுக்கல்.

ஏழையின் வயிற்றிலடிக்கும் இந்த வஞ்சகம், கொடுமையும் கொலைபாதகத் தன்மையும் வாய்ந்தது.

மக்களிடம் அன்பும், நீதி நியாயத்திலே அக்கறையும் கொண்ட சர்க்காராக இருந்தால் பதுக்கல் தேசத் துரோகக் குற்றம் என்று பிரகடனம் செய்து, பதுக்கல் செய்பவர்களைக் கண்டு பிடித்துக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

'கள்ள மார்க்கெட் கழுகுகளிடம் கனிவு காட்டுகிறது காங்கிரஸ், என்று கடைவீதி சென்றுவரும் ஒவ்வொருவரும் மனம் குமுறிக் கூறுகின்றனர்.

பெரிய ஆராய்ச்சி நடத்தியவர்போல, விலைவாசி ஏறியதற்குக் காரணம் உணவுப் பொருளைப் பதுக்கி வைத்திருப்பதுதான் என்று டி. டி. கே. கூறுகிறாரே, இது யாருக்குத் தெரியாது? நாடி பார்த்து, நோய் இன்னது என்று கூறிவிட்டால், போதுமா? மருந்து எங்கே என்று, மக்கள் கேட்கின்றனர்.

கள்ளமார்க்கெட் கழுகுகளை பிடித்துக் கூண்டில் தள்ளாமல், காங்கிரஸ் ஆட்சியினர், விலைவாசி உயர்வை எதிர்த்து கிளர்ச்சி நடத்தியவரை அல்லவா சிறையில் தள்ளுகிறார்கள்; இதென்ன அக்கிரமம் என்று மக்கள் கேட்கிறார்கள்.

'மதுரை அருகே ஒரு சிமெண்ட் ஆலை ஏற்படுத்தலாம்'

'அதற்கான வசதிகள் எல்லாம் அங்கு கிடைக்கின்றன'

மதுரை கலெக்டர் அறிவிப்பு

மதுரை, அக். 6—

"வைகை அணைத் திட்டத்தின் அருகில் ஒரு சிமெண்டு உற்பத்திச் சாலையை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது"

—என்று, மதுரை மாவட்ட கலெக்டர், இன்று நடைபெற்ற மாவட்டக் கமிட்டிக் கூட்டத்தில் அறிவித்தார்.

மதுரையில் இருந்து 40 மைல் தூரத்தில் இந்த அணை கட்டப்பட்டு வருகிறது.

"திட்டப் பகுதியை சுற்றியும் சுண்ணாம்புக் கல் கிடைக்கிறது;

'வைகை அணையினின்றும் மின்சாரம் பெறமுடியும்;

"திட்டப் பகுதியில் இருந்து 10 மைல் தூரத்தில் சிமெண்டு ஆலைக்குத் தேவைப்படும் களிமண்ணும் கிடைக்கிறது;

"அணையில் 7,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது;

"எனவே, வைகை அணைத் திட்டத்திற்கு அருகில் ஓர் சிமெண்டு ஆலை ஏற்படுத்தலாம்," என்றும் அவர் விளக்கம் தந்துள்ளார்.

தலைமை நிலையச் செய்தி:

தோழர் ஏ. வி. பதி குணமடைந்து வருகிறார்

30-9-56 இரவு தஞ்சை கீழவாசலில் ஆயுதந்தாங்கிய சிலரால் தாக்கப்பட்ட தஞ்சை மாவட்ட தி. மு. கழக உறுப்பினரும், நகரசபை உறுப்பினருமான தோழர் ஏ. வி. பதி சிகிச்சை செய்யப்பட்டு வருகிறார். வயிற்றிலும் தலையிலும் பலமான காயங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன.

போலீசார் தாக்கியவர்களைக் கைது செய்து ஜாமீனில் விடுதலை செய்திருக்கின்றனர். விரைவில் வழக்கு தொடரப்படுமென்று தெரிகிறது.

6—10—56 அன்று துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தஞ்சை சென்று பதி அவர்களையும் கழகத் தோழர்களையும் சந்தித்துப் பேசினர்.

பின்னர், திராவிட பார்லிமெண்டரி கட்சித் தலைவர் எஸ். சுயம்பிரகாசம் எம். எல்.ஏ., அவர்களைத் துணைப் பொதுச்செயலாளர் கலந்து பேசியதோடு, இது குறித்துத் தஞ்சை மாவட்டப் போலீஸ் அதிகாரி (D. S. P.) யையும் இருவரும் சந்தித்து விவரங்களை எடுத்துக்கூறினர்.

தோழர் பதியைத் தாக்கியவர்களில் அருணாசலம் என்பவர் சென்ற நகரசபை தேர்தலில் பதியை எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகருக்குத், தீவிரமாக வேலைசெய்தவரென்றும் தெரிகிறது.

30—9—56 இரவு நடைபெற்றக்கலகத்திற்கும் தனக்கும் யாதொரு தொடர்பும் இல்லையென்பதுடன், அந்தச் சம்பவம்கூடத் தமது கடைக்கு 30 அடி தூரத்திற்கு அப்பால் நடைபெற்றதென்றும், அதனைத் தடுக்கப் போலீசுக்குத் தகவல் கொடுக்கலாம் என்று கடையைவிட்டு எழுந்த சமயம் அருகிலிருந்து பாய்ந்து வந்து தன்னைத் தாக்கினார்களென்றும் தோழர் பதி போலீசாரிடம் வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார்.

தஞ்சை மாவட்டப் போலீஸ் அதிகாரியிடம் இவ்விவரங்களையும், துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன், எஸ். சுயம்பிரகாசம் எம். எல்.ஏ., ஆகியோர் எடுத்துக் கூறினர். இது குறித்து உண்மையை அறிந்து அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தஞ்சை D. S. P. தெரிவித்தார்.

தோழர்கள் பெத்தண்ணன், பட்டு, ஜேம்ஸ், செகநாதன் மற்றும் கழகத் தோழர்கள் தோழர் பதி அவர்களுக்குத் துணையாயிருந்து ஆவன செய்து வருகின்றனர். மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ, துணைச்செயலாளர் நாராயணசாமி ஆகியோர் அவ்வப்போது தஞ்சை சென்று கவனித்து வருகின்றனர். தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தஞ்சை சென்று தோழர் பதிக்கு ஆறுதல் கூறியிருக்கிறார்.

'நம் நாடு'
கிடைக்குமிடம்

★

இரங்கூன் (பர்மா):
திரு. ஆர். எஸ். மணி
21, சூலே பெகோடா தெரு,
இரங்கூன் (பர்மா)

குடந்தை:
திரு. ப. சம்பத்
15, தட்டான்படுகைத் தெரு,
கும்பகோணம் (தஞ்சை)

போளூர் (வ. ஆ.):
திரு. சோமு
நியூஸ் ஏஜெண்டு,
போளூர் (வ. ஆ.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.